இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1988 மே மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1988 மே மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 30 தபாற் செலவு: சதம் 75

**1988 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[1988 மே மாதம் 19 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 032/87
1884

**1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஓய்வூதிய (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, "(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம், (359 ஆம் அத்தியாயமான) வான் படைச் சட்டம் ஆகியவற்றில் அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் அல்லது, ஓய்வூதியம்பற்றிய குறிப்புகளில்" என்னுஞ் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம், (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம், (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டம், (432 ஆம் அத்தியாயமான) பாடசாலை ஆசிரியர்கள் ஓய்வூதியச் சட்டம், 1957 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, கடல்கடந்த தொலைத்தொடர்புச் சட்டம், 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டம், ஆகியவற்றில் அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் அல்லது ஓய்வூதியம்பற்றிய குறிப்புக்களில்" என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது. 1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1